**முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்**

**O.S.No.241/2025**

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | இருளப்பன் |
| தகப்பனார் / கணவர் | .. | கிருஷ்ணசாமி |
| வயது | .. | 55 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | செய்யாறு |
| தாலுக்கா | .. | செய்யாறு |

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24 ஆம் நாள் செவ்வாய்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

வழக்கில் வாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். தாவா அடமான சொத்து குறித்து பிரதிவாதிகள் மைனர்களாக இருந்த போது அவர்களது பெயரில் அவர்களின் தாயார் மேரி என்பவர் கார்டியன் என்ற ஓதாவில் 03.11.2000 தேதியில் கண்ணபிரான் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதற்கான கிரையப்பத்திரத்தின் அசல் வா.த.சா.ஆ.1, தாவா அடமான சொத்து குறித்து பிரதிவாதிகள் இருவரும் வாதி பெயருக்கு 27.03.2017 தேதியில் எழுதி கொடுத்த அடமான படன் பத்திரத்தின் அசல் வா.த.சா.ஆ.2, தாவா அடமான சொத்து குறித்து பிரதிவாதிகள் பெயரில் உள்ள பட்டா (பட்டா எண்.47) கணினி நகல் வா.த.சா.ஆ.3,

வாதி பிரதிவாதிகளுக்கு  தாவா அடமான கடன் தொகையை பைசல் செய்ய வேண்டி 30.07.2025 தேதியில் அளித்த வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.த.சா.ஆ.4, வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டைகள் – 2 அசல் வா.த.சா.ஆ.5, வாதியின் ஆதார் அட்டை நகல் வா.த.சா.ஆ.6 ஆகும்.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**